**அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம் என்ற நூல் எனது அறைக்குள் வந்துவிட்டது. செம போத...... Thalapathy Durai**

தமிழ்நாட்டில் கூரியர் வசதி கூட இல்லாத நிலையில் இருக்கும் எனது ஊரில்,13 நாட்டு கருப்பு கவிஞர்களின் கவிதை, சிறுகதை, கட்டுரை நாடகம் ஆகிய உள்ளடங்கிய இந்த நூலினை மொழியாக்கம் செய்து, இந்நூலினை நான் படிப்பதற்கு காரணமாக இருந்த #இந்திரன் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் இலக்கிய உலகில் மானுட விடுதலைக்கு எதிரான கொள்ளைகளை ஏற்று,அதற்காக வலிந்து வலிந்து எழுதும் எழுத்துக்களும், எழுத்தாளர்களுமே கொண்டாடப்படும் சாபக்கேடு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவே இலக்கிய வரலாறாக பதிவு செய்யப்பட்டும் வருகிறது.

அறைக்குள் வந்து ஆப்பிரிக்க வானம் நூலை நான் படித்தேன். இது பட்டுப்புழுவிலிருந்து வெளிப்படும் இழையை போலவே இயல்பாகவும் அழகாகவும் படைத்து இருக்கிறார்கள். இதில் வலிந்து எழுதிய எழுத்துக்கள் இல்லை.

தற்போது இசைக்குறிப்புகள்போல கவிதைகள் எழுதி விட்டு, இக்கவிதைகளை புரிந்துகொள்ள தனி ஆற்றல் வேண்டும் என வாதிடும் இலக்கியவாதிகளே! அறைக்குள் வந்த ஆப்ரிக்க வானம் நூலை படித்துபாருங்கள். இந்நூல் முழுவதும் ஆகச்சிறந்த இசையாகவே இருக்கிறது.. எனக்கு இசைக்குறிப்புகள் எதற்கு!இசையே வேண்டும்.

இதில் உள்ள இசைகளை நீங்களே கேட்டுப்பாருங்கள்.

இந்நூலினை படித்துவிட்டு நான் கருப்பு இயேசுநாதரரை தேடினேன். கருப்பு இயேசுநாதர் என்பர் வேறுயாரும் இல்லை. இந்நூல் உள்ள 13நாட்டு கருப்பு கவிஞர்களும் கருப்பு இயேசுநாதர்தான்.

அய்யா இந்திரன் அவர்களுக்கு மேலும் நன்றி.....

இதில் உள்ள கவிஞர் பற்றிய வாழ்க்கை வரலாறு சிறு குறிப்புகள் பின்னிணைப்பாக பதிவு செய்யபட்டிருக்கலாம்.